1979 நவம்பர் 3]

உற்பத்தியைப் பயன்படுத்தும் வகையில், என்னுடைய தொகுதியில் எந்தத் தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால் அந்தத் தொழிற்சாலையை அங்கே நிறுவ வேண்டுமென்று எடுத்துக் கூறி, அமைச்சரவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, நிலை அறிந்து உறுப்பினர் அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

வைகை அணைக்கட்டுப் பகுதியில் உள்ள காட்டிலாகா பயிற்சி நிலையம்.

* வினா எண் 88—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர்-கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வைகை அணைக்கட்டுப் பகுதியில் உள்ள காட்டிலாகா பயிற்சி நிலையத்தில் படித்து வருபவர்களுக்கு விசேஷமாக உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகிறதா?

(ஆ) முதல் மதிப்பெண் எடுத்தவர்களுக்குக் கொடுத்து வந்த பரிசு ஏன் நிறுத்தப்பட்டது?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) முதல் மதிப்பெண் பெறும் பயிற்சியாளருக்குப் பதக்கம் வழங்கும் முறை இன்னும் நீடிக்கிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி கொடுத்து கிட்டத்தட்ட ஓராண்டுக்காலம் ஆகிறது. இவ்வளவு வேகமாக வந்ததற்காக நன்றி கூறுகிறேன். வைகை அணைக்கட்டுப் பகுதியிலே உள்ள டிரெயினிங் சென்டரிலே கொடுக்கக்கூடிய அந்த டிரெயினிங் காட்டிலாகா சம்பந்தப்பட்டவர்களுக்கு—ஏற்கனவே வேலையில் உள்ளவர்களுக்குத்தான் டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. வேலையில் உள்ள காலத்திலே டிரெயினிங்குக்கு வரக் கூடியவர்களுக்கு டி. ஏ. கூடக் கொடுப்பதில்லை என்று கேள்விப்படுகிறோம். டிரெயினிங் சென்டரிலே, படுக்கை இன்னும் மற்ற வசதிகளை இந்த அரசு செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அப்படி பயிற்சி அளிக்கப்படுகிறவர்களுக்கு சுற்றுலாவிற்கு நேரடிக் கல்வி கற்கும் நிமித்தம் அழைத்துச் செல்லப்படும்போது பிரயாணப்படி அளிக்கப்படுகிறது